# கதம்பம்

**நவம்பர் 2023**

திருவள்ளுவர் ஆண்டு 2054






## இந்த இதழில்...


03 அறிவிப்பு மடல்

07 இணை பொருளாளர்

08 என் பார்வையில் அமெரிக்கா

12 கண்ணனின் வைர வரிகள்

13 ஆண்கள் கேளிக்கை கொண்டாட்டம் - புகைப்படங்கள்

16 நன்றி உரை


All submissions for Kadambam/கதம்பம் should be emailed to newsletter.rts@richmondtamilsangam.org by the 15th of each month.

(பக்கத்திற்குச் செல்ல தலைப்பைக் கிளிக் செய்யவும்)

இரிச்மண்டு
தமிழ்ச்சங்கம்



# First aid, CPR, & AED Event

CSRE gives the training (www.csrerva.com)

Training includes

- Training on using an EpiPen
- Relief of choking
- Sling application for broken bones
- Bleeding control of wounds

To register use this QR code

**இலவச பயிற்சி!**

RTS is partnering with CSRE to provide a training on First Aid, CPR, and AED session for the first time. These are essential life-saving skills, and such training can make a significant difference in emergencies. Offering these sessions can benefit the community and help people be better prepared to respond to emergencies.

## Details

- **Age**: 13 and above (Limited seats; up to 2 per family)
- **Date**: Dec 09, Saturday from 9:30am to 12pm
- **Venue**: Tuckahoe Library
- **Address**: 1901 Starling Drive, Henrico, VA 23229
- Registration open till **Nov 30th**

**Certificates will not be provided.**

**Richmondtamilsangam@gmail.com**

இரிச்மண்டு தமிழ்ச்சங்கம்

# HCPS Specialty Centers

## Intro and Insight

**A STUDENT PANEL WILL BE PRESENT TO ANSWER YOUR QUESTIONS.**

REGISTRATION CLOSES ON

**12/1/2023**

*Dec 9th 2023*

*12:15 - 1:45 pm*

*Tuckahoe Library*
*1901 Starling Dr, Henrico, VA 23229*




***THIS IS A MEMBERS ONLY EVENT***

LIMITED SEATS ONLY!

# Coats Drive for Homeless Children

இரிச்மண்டு
தமிழ்ச்சங்கம்
organizes

**Suggested amount is $25**
which is the approximate price of a coat

**Our target is 50 coats**

**We buy the coats and hand over to “Blessing Warriors RVA”, an org that works with homeless people (www.blessingwarriorsrva.com)**



**We will provide a receipt for any tax deductions for the coat donations.**

| Suggested amount is **$25** | Our target is **50 Coats** | will collect amount until **12/9/2023** |
|---|---|---|

**Zelle desired amount to RTS email address**
**richmondtamilsangam@gmail.com**

# இரிச்மண்டு தமிழ்ச்சங்கம்




**என்றென்றும் உங்கள் இல்லங்களிலும்**
**உள்ளங்களிலும் மகிழ்ச்சி பொங்க**
**இனிய தீபாவளி நல் வாழ்த்துகள்..!**



திருமதி. நித்யா ராஜேந்திரன் (என்ற) நித்யா கணபதி
இணை பொருளாளர்

**இரிச்மண்டு தமிழ் சங்க சகோதர சகோதரிகளே,**

**இரிச்மண்டு தமிழ்ச்சங்க நிர்வாகக்குழுவில் இணைந்து இணை பொருளாளராக பணியாற்ற வரும் திருமதி. நித்யா ராஜேந்திரன் அவர்களுக்கு நல்வரவு. அவர்தம் பணி சிறக்க வாழ்த்துகிறோம்.**

# எனது பார்வையில் அமெரிக்கா

(நொளம்பூர் கண்ணன்)

எனது மதிப்பிற்குரிய கதம்பம் இதழின் வாசகர்களுக்கு அன்பு வணக்கங்கள். எனது மகன் அடுத்தபடியாக என்னை அழைத்துச் சென்ற இடம் வாஷிங்டன் போட்டோமேக் ஆற்றின் கரையில் அமைந்த ஜார்ஜ் டவுன் என்ற அழகு கொஞ்சும் அற்புதமான இடம்தான். பொதுவாக வாஷிங்டனிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நான் பார்த்த ஒருசில இடங்களில் இரவு ஒன்பது மணிக்கு மேல் வாகனப் போக்குவரத்தும் மனித நடமாட்டமும் குறைந்து கொண்டேயிருக்கும். நாங்கள் அங்கே சென்ற போது இரவு எட்டு மணிக்கு மேலாகிவிட்டது. இருந்தும் அங்கே அன்று இளைஞர் முதல் முதியோர் வரை கூட்டம் கூட்டமாக வந்து கொண்டே இருந்தார்கள். காரணம் அந்த இடம் மிகவும் ரசிக்கும் வகையில் இருந்தது. நம்மைத் திகைப்பில் ஆழ்த்தும்படி ஒளி சிந்தும் பல அடுக்குமாடி கட்டிடங்கள், அவற்றில் வரிசையாக அமைந்த பல்வேறு அறுசுவை உணவகங்கள் மற்றும் அக்கட்டிடங்களின் வெளியே திறந்த வெளி உணவகங்கள், அவற்றில் அனைத்திலும் குழந்தைகள் முதல் பெரியோர்வரை பல்வேறு உணவு வகைகளை ரசித்து உண்கின்ற காட்சி காண்பதற்கே மிகவும் ரம்மியமாக இருந்தது. இங்கே சொகுசு பயணம் செய்யப் படகுகளும் அதில் பயணம் செய்து கொண்டே உணவு உண்பதற்கான வசதிகளும் உண்டு. நாங்களும் எங்களுக்கு வேண்டியவற்றைச் சாப்பிட்டு விட்டு வெளியே செல்லும் நுழை வாயிலை நோக்கி வரும் வழியில் பல ஆலோவின் (HOLLOWEEN) பொம்மைகள் கடைகளிலும் வரிசையாக அலங்கரித்து வைத்திருந்தார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை.

(அடுத்த பக்கம் பார்க்க)

அருகில் ஒருவரிடம் விசாரித்தபோது அவர் சொன்னார் "இன்னும் இரண்டு நாட்களில் இங்கு "முன்னோர்களை அழைக்கும் திருவிழா" கொண்டாடப்படுவதையொட்டி பொம்மைகள் அலங்கரிக்கப்பட்டு கொண்டாட்டம் களைகட்டும்". அந்த முன்னோர் பொம்மைகளுடன் பலர் புகைப்படங்கள் எடுத்துக் கொள்வதைப் பார்த்து நாங்களும் எடுத்துக் கொண்டோம். இந்த காட்சிகளைப் பார்த்தபோது எனக்கு நம்மூரில் ஆடி அமாவாசையன்று மூத்தோர் நினைவு வழிபாட்டுப் பூஜைகளை ஆற்றங்கரைகளில் நடத்துவது ஞாபகத்திற்கு வந்தது. இடங்கள் வேறு. மதங்கள் வேறு. விழாக்கள் கொண்டாடும் முறைகள் வேறு. ஆனால் அவர்களின் அடிப்படைக் கொள்கைகள் மட்டும் ஒன்றே.!

அடுத்தபடியாக நாங்கள் சென்ற இடம் வாஷிங்டன் D.C.-ன் மையப்பகுதிக்கு அருகே போட்டோமேக் ஆற்றின் கிழக்குக் கரையில் ஜான் எப். கென்னடி நினைவகக் கட்டிடம். இந்த சென்டர் 2700 F-தெரு, N.W. வாஷிங்டன் D.C. என்ற முகவரியில் அமைந்திருக்கிறது. இந்த நினைவகத்தின் முகப்பிலேயே அழகிய நீரூற்று நம்மை வரவேற்கின்றது. சற்று இளைப்பாறிவிட்டு மிக உயரமான நுழைவாயிலின் உள்ளே நுழையும் போதே அருமையான அக்கட்டிடத்தின் பிரம்மாண்டத்தினை நம்மால் உணர முடிகிறது. அந்த நுழைவாயிலில் இருந்து அதைத் தாண்டி உள்ளே நடக்கும் போது சிவப்புக் கம்பளம் விரித்து நமக்கு வரவேற்பு. அந்த ஹாலிலிருந்து இடது பக்கம் திரும்பினால் இந்திரலோகத்தில் நுழைந்தது போன்ற உணர்வு.. கொஞ்சம் நிமிர்ந்து சீலிங்கை சற்று அண்ணாந்து பார்த்தாலே நமக்கு கழுத்துவலி ஏற்பட்டுவிடுமோ என்று அச்சப்படும் அளவில் மிகவும் உயரத்தில் அமைத்திருக்கிறார்கள். இரவில் உள்ளே நுழைந்த எங்கள் கண்கள் ஒளிவெள்ளத்தில் மூழ்கும்படி அத்தனை விளக்கு அலங்காரங்கள்

(அடுத்த பக்கம் பார்க்க)

அந்த காலத்து அரசர்களின் கொலுமண்டபத்தின் உள்ளே
நுழைந்தது போன்ற உணர்வு ஏற்பட்டது. அப்படியே நடந்தால்
சற்று தொலைவில் மிக அழகான கென்னடி அவர்களின் உருவச்சிலை
ஒன்றை பொதுமக்கள் காட்சிக்கு வைத்துள்ளனர். அந்த சிலையைப்
பார்த்ததும் என் நினைவலைகள் என்னைக் கல்லூரி நாட்களுக்கு
அதாவது 60 ஆண்டுகளுக்கு முன்பு கொண்டு சென்றது. எனது
கல்லூரி நாட்களில் மிகப் பிரபலமாய் இருந்த பேனா நண்பர்கள்
சங்கம் மூலம் எனக்கு இந்தியா ஆர்னால்டு என்ற பெண் பேனா
நண்பர் கிடைத்தார். அவர் அமெரிக்காவின் BROAD HEADS VILLE
என்ற இடத்தைச் சேர்ந்தவர். முதலில் கடிதப் பரிமாற்றங்கள், அதன் பின்
பரிசுப் பொருட்கள் பரிமாற்றங்கள் என எங்கள் நட்பு தொடர்ந்தது.
அவர் ஒருமுறை அழகிய வண்ணக் கென்னடியின் படத்தினை எனக்கு
அனுப்பி அவருடைய "நாடு உனக்கு என்ன செய்திருக்கிறது என்று
கேட்பதற்கு முன் நாட்டுக்கு நீ என்ன செய்திருக்கிறாய்" என்ற வாசகத்தில்
தொடங்கி அவருடைய நற்பணிகள், அதன் உச்சகட்டமாக நாட்டு
மக்களுக்காக தன் உயிரையே தியாகம் செய்த பாங்கு ஆகியவற்றைப்
பாராட்டி விரிவான கடிதமும் எழுதினார். அன்று முதல் கென்னடி என்
மானசீகத் தலைவனாக ஆகிவிட்டார். என்றாவது ஒருநாள் கென்னடி
ஆட்சி செய்த வாஷிங்டன் நகரைப் பார்க்க வேண்டும் என்பது என்
நெடுநாளைய கனவு. அது இன்று நிறைவேறிவிட்டதில் ஓர் இனம்
புரியாத மகிழ்ச்சி. என் இளமைக்கால நினைவுகளுக்கு உங்களை
அழைத்துச் சென்றதற்கு தயவு செய்து மன்னித்துவிடுங்கள்.
மீண்டும் கென்னடி சென்டருக்கு வருவோம். கென்னடி சிலையுடன்
நாங்கள் புகைப்படம் எடுத்துக் கொண்டோம். அந்த மாபெரும்
கட்டிடத்தில் அமெரிக்காவின் பல்வேறு பிரபல இசைக்குழுக்கள்,

(அடுத்த பக்கம் பார்க்க)

நடனக் குழுக்கள், மற்றும் பல கலைக் குழுக்கள் அரங்கங்களை வாடகைக்கு எடுத்து இசைக்கச்சேரிகள், நடன, நாட்டிய நிகழ்ச்சிகள், நாட்டுப்புற நடனங்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து நடத்துகின்றனவாம். இந்த கலை நிகழ்ச்சிகளின் விபரங்களை இந்த கென்னடி சென்டர் வெளியிடும் "சென்டர்" (CENTER) என்ற இதழிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இந்த மாபெரும் அரங்கத்தில் நமது A.R ரஹ்மான் அவர்கள் இசைக்கச்சேரி நடைபெற்றபோது அரங்கமே நிரம்பி வழிந்ததாம். இப்படியே பார்த்துக் கொண்டே மேல் தளத்திற்கு வந்தோம். அங்குதான் திரு கென்னடி அவர்களின் வாழ்க்கை வரலாறு, இளமை தொடங்கி இறுதிவரை உள்ள புகைப்படங்கள், அவரது முத்தாய்ப்பான பேச்சுக்கள் அடங்கிய ஒலிநாடாக்கள், திரைப்படங்கள் நமது கண்களுக்கும், காதுகளுக்கும் அருமையாக அமைந்திருந்தன. இறுதியாக அக்கட்டிடத்தின் மொட்டை மாடிக்கு வந்துசேர்ந்தோம். அங்கே இயற்கைக் காட்சிகளை விருப்பத்தோடு அமர்ந்து ரசித்திட வசதியான இருக்கைகள் அமைத்திருக்கிறார்கள். அங்கிருந்து பார்த்தால், அமெரிக்காவின் போட்டோமேக் ஆறு, அருகிலுள்ள மூன்று மாகாணங்களையும் இணைக்கும் அற்புத காட்சிகளைக் காணலாம். அதுவும் இரவு நேரத்தில் ஒளி வெள்ளத்தில் மாயாஜால காட்சிகளை கண்டது போன்ற ஓர் உணர்வு உங்களுக்கும் ஏற்படும். மேலும் புகைப்பட கலைஞர்களுக்கு தீனிக்கு பஞ்சமில்லை. தனிமையில் பொழுது போக்க தகுந்த இடம் என்றால் மிகையாகாது. இரவு 10 மணிக்கு மேலாகியும் அந்த இடத்தைவிட்டு எழுந்து வர மனமில்லை. எனக்கும் இளம் வயது மானசீக தலைவனுக்கு மௌன அஞ்சலி செலுத்திய திருப்தி. மொத்தத்தில் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட ஒரு நினைவகத்தை பார்வையிட்ட மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினோம்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்

இப்படிக்கு

தொளம்பூர் — கண்ணன்

# என்னைக் கவர்ந்த சில வைரவரிகள்

((நொளம்பூர் - கண்ணன்))

1) எல்லா குற்றங்களையும் மன்னிக்கும் ஒரே நீதி மன்றம் அம்மாவின் இதயம்.

2) உலகினை வெல்ல இரு "கைகள்" வேண்டும். ஒன்று முகத்தில் "புன்னகை". அடுத்தது அகத்தில் "நம்பிக்கை"

3) மலர்கள் மீது நாம் படுத்தால் அது "முதல் இரவு". அதே மலர்கள் நம் மீது படுத்தால் அது "கடைசி இரவு" இவ்வளவு தான் வாழ்க்கை.

4) பொறுமை கொண்டவன் வாழ்வில் சிறப்பான். பொறாமை கொண்டவன் வாழ்வையே இழப்பான்.

5) அடுத்தவர் சிரிப்புக்கு எனது வலி காரணமாகலாம். ஆனால் அடுத்தவர் வலிக்கு எனது சிரிப்பு காரணமாக இருக்கக் கூடாது.

6) இந்த உலகில் எந்தப் பொருளும் இரண்டு முறை தான் அழகாகத் தெரியும். ஒன்று அடைவதற்கு முன்பு. இரண்டு இழந்ததற்குப் பின்பு.

7) மரணத்தைப் பற்றி யாரும் கவலைப் படாதீர்கள். நீங்கள் இருக்கும் வரை அது வரப் போவதில்லை. அது வரும்போது நீங்கள் இருக்கப் போவதுமில்லை. பிறகு ஏன் கவலை!

இவண்

நொளம்பூர். கண்ணன்

# ஆண்கள் கேளிக்கை கொண்டாட்டம் 2023








BACK TO
80's













Special Thanks To
Our Sponsors
United Real Estate Richmond
Ravi Gutta
804-991-0269
RaviGutta09@gmail.com
Find Your Freedom
Maharajah
Physical Therapy
Sports Rehab
Aquatic Therapy
RVA
Faith Devapalan
BSM, MA, MED, EDS, EDD
804-300-3106
Piano | Guitar | Vocal | Teacher
Aekta Chawla
Unmatched Service
zriliant
KUMON
Indian Pastry House
Indian Fast Food & Bakery Cafe
Ph: 804-332-5751
Suvai
Idly & Dosa Batter
FATHOM
KUMAR RAMANATHAN
Modern Indian Cafe
Desi Bites
Aha Indian Kitchen
www.Richmondtamilsangam.org

Tech Gurukul
Education Changes Lives
www.techgurukulusa.com
Python • Java • AWS • Data Science
The Peacock Montessori
5404 Bennett Ln, Glen Allen, VA
searchblox
RAMS PAAN SHOP
Call 8047545543
Party Orders and
Individual orders accepted
With Best Compliments From
Apsaras Arts Dance Group
Vishali Kachiraju, CPA
Richmond, VA
AKSHATHA
Add your Business
Richmond Tamil Sangam



**சிவசக்தி அறிவுக்கண்ணன்**

# நன்றி உரை

கதம்பம் இதழில் தங்கள் கதை, கட்டுரை, கவிதை மற்றும் பல பயனுள்ள விஷயங்களை இரிச்மண்டு சமூகத்துடன் பகிர்ந்து கொண்ட அனைத்து எழுத்தாளர்களுக்கும் தமிழ்ச்சங்க நிர்வாக குழுவின் மனமார்ந்த நன்றிகள்.

All submissions for Kadambam/கதம்பம் should be emailed to newsletter.rts@richmondtamilsangam.org by the 15th of each month.

## நன்றி!

செய்திமடலை சரிபார்த்து வெளியிட உதவிய மார்செலின், சந்தானம், சுபா பாபு , ஸ்ரீ லதா, இளமாறன் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகள் மற்றும் எங்கள் செய்திமடலுக்கு ஆதரவளித்த அனைத்து RTS குழு உறுப்பினர்கள் மற்றும் அனைவருக்கும் நன்றி.

## Feedback

இந்த மாத செய்திமடல் பற்றி கருத்து தெரிவிக்க கீழே உள்ள இணைப்பை பயன்படுத்தவும்

**Click Here!**

**newsletter.rts@richmondtamilsangam.org** எனும் மின்னஞ்சலிலும் எங்களை தொடர்பு கொள்ளலாம். நன்றி!

## website:

www.richmondtamilsangam.com

## contact us:

richmondtamilsangam@gmail.com
newsletter.rts@richmondtamilsangam.org
tamilschool@richmondtamilsangam.org